**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ஒ.மு. எண். 5191/ஆ5/2024, நாள்.03/01/2025**

*****

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – சட்டப்பேரவை அறிவிப்பு எண். 106 – "உணவே மருந்து" என்ற கூற்றின்படி ஆரோக்கியமான உணவு பழக்கவழக்கங்கள் மற்றும் உணவு பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்டம், உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலரின் கடித ந.க.எண்.826/அ1/உபாது/2024, நாள்.

*****

பார்வையில் காணும் கடிதத்தில், வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகளுக்கு உணவு பாதுகாப்பு துறை சார்பாக சட்டப்பேரவை அறிவிப்பு எண். 106ன் படி "உணவே மருந்து" பாதுகாப்பான மற்றும் சமச்சீர் உணவு குறித்து நடமாடும் ஆய்வு கூட வாகன மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது எனவும் வாகனம் பள்ளியினை அணுகும்போது அனுமதிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உணவு பாதுகாப்பு துறையின் நடமாடும் ஆய்வு கூட வாகனம் வரும்பட்சத்தில் அவ்வாகனம் மற்றும் அத்துடன் வரும் உணவு பகுப்பாய்வாளரை அனுமதிக்குமாறு மேலும் மாணவர்களின் கல்வி நலன் பாதிக்காதவாறு "உணவே மருந்து" விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாணவர்கள் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1/2 03.01.25

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. மரு. வி. செந்தில்குமார், M.B.B.S
   உணவு பாதுகாப்ப துறை, B–பிளாக், 2வது தளம்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலை) வேலூர் மாவட்டம்.